பெரிய பாலங்கள் மற்றும் சப்-வே கட்டி, அதன் மூலமாக யானைகள் செல்வது குறித்த ஆலோசனை, ஏற்கெனவே நம்முடைய பேரவையில் சொல்லப்பட்டு, வனத் துறையினுடைய தலைமை அதிகாரிகள் மற்றும் செயலாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அந்தக் கருத்துருவையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, தற்சமயம் ஒரு சில குறிப்பிட்ட விபத்துகளைத் தவிர, யானைகளுக்கு எந்தப் பாதிப்போ, பிரச்சினையோ இல்லை. கோயம்புத்தூர் பகுதியிலேதான் சில இடங்களில் இரயிலில் அடிபடுவதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. இப்போது அதுவும் முற்றிலுமாக தடுக்கப்பட்டிருக்கிறது. வன உயிரினங்களைக் காப்பதற்கு எந்தெந்த வகையில் முயற்சி எடுக்க முடியுமோ, அந்த வகையில் முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***7100—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம், கிணார் ஊராட்சி, தோட்டநாவல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய, கிணார் ஊராட்சி, தோட்டநாவல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், அது நிறைவேற்றித் தரப்படும்.

2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற உயிர் காவியம், திராவிட இயக்கத்தின் மூன்றாம் தலைமுறை, தமிழினத்தின் தாய்ப் பறவை தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். வாழுகின்ற தலைமுறையின் வசந்தகாலம்; வருங்காலத் தலைமுறையின் வரலாற்று நாயகன்; திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறையின் தன்னிகரில்லாத தலைவர், எங்கள் எதிர்க்கட்சித் தலைவரையும் வணங்குகிறேன்.

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்தில் கிட்டத்தட்ட 58 ஊராட்சிகள் இருக்கின்றன. இந்த 58 ஊராட்சிகளிலே கிணார் ஊராட்சி என்பது மிகப் பெரிய ஊராட்சி. 10,000 மக்கள் வசிக்கக்கூடிய ஓர் ஊராட்சி. இந்த ஊரிலே நடுநிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்த நடுநிலைப் பள்ளியில் பெரும்பான்மையாக எஸ்.சி./எஸ்.டி. மாணவர்கள்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியைச் சுற்றி இருக்கின்ற கருங்குழி கிழக்கு காலனி, ஏறுவாக்கம், இருசாமநல்லூர், கே.கே. புதூர், தோட்டநாவல் மேட்டுக்காலனி, கிணார் காலனி போன்ற கிராமப் பகுதிகளிலே இருந்து இந்தப் பள்ளிக்கு வந்து மாணவர்கள் படிக்கின்றார்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளியிலே படிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தத் தோட்டநாவல் கிராமத்திலிருந்து கருங்குழி பேரூராட்சிக்கோ அல்லது மதுராந்தகம் நகராட்சிக்கோ சென்றுதான் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு 7 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். இந்தப் பள்ளி மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு படிப்பதற்காக 7 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்கின்ற நேரத்தில், இடையிலே இரயில்வே பாதை இருக்கிறது. தென்னகத்தை நோக்கி செல்லக்கூடிய எல்லா இரயில்களும் அதிகமாக அந்த வழியாகத்தான் செல்கின்றன. ஒரு சமயம் அந்த இடத்திலே இரயில்கள் கடக்கும் நேரங்களில் கேட் போட்டுவிட்டார்கள் என்று சொன்னால் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் என்று பொது மக்களுக்கு தாமதம் ஏற்படுகிறது. பள்ளிக்குச் செல்லக்கூடிய பிள்ளைகளின் படிப்பு பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 12 கிராமங்கள் சுற்றிலும் இருக்கின்றன என்று சொன்னார்கள். எட்டாம் வகுப்பிலே குறிப்பாக 20 மாணவர்கள் மட்டும்தான் அங்கே படிக்கின்றார்கள். நிதியும் ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. கூடுதலாக 40 மாணவர்கள் அங்கு சேர்க்கப்பட்டால், உடனடியாக அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே 164 மாணவர்கள் இப்போது படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், 3 ஏக்கர் நிலம் தேவை என்று அரசாங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கு 3 ஏக்கர் அல்ல, 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. மாணவர்கள் அங்கு படிப்பதற்கான கட்டட வசதியும் இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் செலுத்துவதற்கு அந்த ஊர் மக்கள் 10,000 ரூபாய் செலுத்தியிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமென்று அறிவிப்பு செய்தீர்களேயானால், அடுத்த நிமிடமே அந்த ஊர் மக்கள் 90,000 ரூபாயைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ஆவன செய்து தரும்படி தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்பள்ளியில் 164 மாணவர்கள் படிப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், 8 ஆம் வகுப்பில் 20 மாணவர்கள்

2018 ஜூன் 6]

மட்டும்தான் இருக்கிறார்கள். ஆகவே, கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவார்களேயானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். 5 ஏக்கர் நிலம் இருப்பதாகக் குறிப்பிட்டார். அதுவே தேவையான அளவிற்கு இருக்கிறது. அதற்குப் பின்னர், ரூ.10 ஆயிரம் நிதி வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகிற நேரத்தில், எஞ்சியுள்ள 90 ஆயிரம் ரூபாயையும் செலுத்துவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். இதையும் அரசு பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் ஆசியோடு, வாய்ப்பளித்த தங்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி, அந்தியூர் வட்டாரம், பர்கூர் ஊராட்சி, தேவர்மலையில் உயர்நிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. அதேபோல, கோபி வட்டாரம், பொம்மநாயக்கன்பாளையம் ஊராட்சி, கே. மேட்டுப்பாளையத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. தேவர்மலை உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரை, மலைப் பகுதியில் அமைந்துள்ளதால், முழுக்க முழுக்க மலைப் பகுதியில் வசிக்கும் மாணவர்கள் பயின்று வருகின்றனர். கே. மேட்டுப்பாளையம் உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ள பகுதி மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த காலங்களில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பகுதியாகும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக் கல்வித் துறையில் சாதனை புரிந்துவரும் சாதனைச் செம்மல் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மேற்குறிப்பிட்ட இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர ஆவன செய்வாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா என்கிற ராஜாகிருஷ்ணன் அவர்கள் 3 பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொம்மநாயக்கன்பாளையம், கே. மேட்டுப்பாளையம் மற்றும் அந்தியூர் மலைப் பகுதியில் இருக்கிற 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு 100 பள்ளிகள்தான் தரம் உயர்த்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. உங்கள் தொகுதியில் ஏதேனும் ஒரு பள்ளியை நீங்கள் தெரிவு செய்வீர்களேயானால், இந்த ஆண்டே அந்தப் பள்ளி தரம் உயர்த்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்ததால் கேள்வி கேட்க இயலாத நிலையில், இன்று எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட இத்தளார் ஊராட்சியில் எமரால்டு பகுதியில் 21 கிராமங்களைச் சேர்ந்த எஸ்.சி. காலனியில் உள்ள பள்ளிக்குச் சென்ற வருடமே உரிய தொகையினைச் செலுத்தி, அந்தக் கட்டடத்திற்கான இடத்தை தாங்கள் பார்வையிட்டுச் சென்று, அனைத்து பூர்வாங்க வேலைகளும் முடிந்த நிலையிலே, தாங்கள் அதை முடித்துத் தருவதாகக் கூறினீர்கள். ஆனால், அது வேறு ஒரு தொகுதிக்குச் சென்றுவிட்டது என்பதை மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறை தயவுசெய்து எனது தொகுதியில் எமரால்டு பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எமரால்டு பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் பெரியதம்பூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சென்ற ஆண்டே கோரிக்கை வைத்து, அதற்கு பங்குத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் கட்டியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டாவது அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை, அம்மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*